கிண்ணியா நகர சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 23 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை 2020 செப்தெம்பர் 04 மற்றும் 2020 செப்தெம்பர் 09 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் கிண்ணியா நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இருப்பு அறிக்கையின் பிரகாரம் 78 எண்ணிக்கையான பொருட்கள் ரூபா 40,920 ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தது. விற்பனைப் பெறுமதியே கணக்குகளில் கழித்துக்காட்டப்பட்டிருந்தது. | பொருட்களின் அடிப்படையில் பெறுமதியை கழித்துக் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இருப்பு அறிக்கையின் பிரகாரம் ரூபா 40,920 விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களின் பிழைகள் காரணமாக தொடர்புடைய சொத்துக்களில் இருந்து அகற்றப்படவில்லை. அடுத்து வரும் இறுதி கணக்குகளில் தொடர்புடைய சொத்துக்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டில் குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியத்தின் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் வடிகான் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வலுவுட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 05 வேலைத்திட்டத்திற்கான | கணக்குகளில் பதியப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அடுத்து வரும் இறுதிக்கணக்கில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

கொடுப்பனவுகள் முறையே ரூபா 3,440,215 , ரூபா 12,892,866 மற்றும் ரூபா 4,582,732 சிட்டைகள் குறித்த அமைச்சுகளிற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அத்தொகை பெறப்பட்டு குறித்த ஒப்பந்த காரர்களுக்கு வழங்கப்படவேண்டியிருந்த போதிலும் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

(ஆ) தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொங்கல் கணக்கு செலவு மீதி ரூபா 29,358,517 தொகையை அடையாளம் கண்டு பதிவழிப்புச் செய்யாது மொத்தமாக திரண்ட நிதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது. | கணக்கு மீதியை சரியான முறையில் இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு சீர் செய்யப்பட்ட தொங்கல் கணக்கு சம்பந்தமாக உள்@ராட்சி உதவி ஆணையாளர் ஊடாக குழு ஒன்று அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்து என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்களை சமர்ப்பிக்காததால் சொத்துக்களில் கணக்கு விடயங்கள் ரூபா. 145,375,012 கணக்காய்வின் போது திருப்திகரமாக ஆராய்ய முடியவில்லை. | போதுமான ஆதாரங்கள் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆதாரங்களுக்கான ஆவணங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன் |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| i) பிரிவு 396 | ஆறு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட, ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 147,500 கூட்டு மொத்தப் பெறுமதியான 11 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காசோலைகளுஞ் தொடர்பாக சபையில் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| ii) பிரிவு 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 6,713,385 தொகையான கேள்வி, வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட கேள்வி, வைப்புகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருமானத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| iii) பிரிவு - 880 | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப் பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பாதுகாப்பு | குறித்த உத்தியோகத்தரிடம ிருந்து பிணைப்பணம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாதுகாப்பு, பிணைப்பணம் அறிவிடுவது தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் களுடன் கலந்துரையாடி தீர்க்கமானிக்க முடிவெடுக்கப பட்டுள்ளது என்பதை தயவுடன் |

| | |
|---|---|
| பிணைப் பணத்தின் அளவு தீர்மானிக்கப்படாததால் பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | அறியத்தருகின்றேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 5,468,883 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 10,171,996 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம | பெறப்பட்ட வருமானம் | 2019.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை |
| | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” |
| வீதவரிகள் | 2,300 | 389 | 274 | 1,629 | 2,000 | 752 | 83 | 2,299 |
| வாடகை | 500 | 13,107 | 11,284 | 12,307 | 11,500 | 8,718 | 9,536 | 11,529 |
| மொத்தம் | 2,800 | 13,496 | 11,558 | 13,936 | 13,500 | 9,470 | 9,619 | 13,828 |

2.2.2 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவையாகவுள்ள ரூபா 1,628,639 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது வீத வரி வருமானம் கூடுதலாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வீதிவரி நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கு உரிய உத்தியோகத்தர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **2.2.3 மீன் சந்தை குத்தகை** | | |
| 2008 ஆம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான மீன் சந்தை குத்தகை நிலுவை ரூபா 7,431,250 தொகையை அறவிட சபை இன்று வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குத்தகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீன்சந்தை குத்தகை நிலுவை சம்பந்தமாக 2011 ஆம் ஆண்டு 2013 ஆம் ஆண்டுகளுக்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் ஏனைய ஆண்டுகளுக்கான நிலுவைகளுக்கும் சபையின் சட்டத்தரணி ஊடாக Letter of Demand அனுப்பப்பட் டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| **2.2.4 இறைச்சிக் கடை குத்தகை** | | |
| 2007 ஆம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான இறைச்சிக் கடை குத்தகை நிலுவை ரூபா 2,776,726 தொகையை அறவிட சபை இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான இறைச்சிக்கடை நிலுவைகளுக்கு Letter of Demand அனுப்பப்பட்டுள்ளதுடன் சில இறைச்சிக்கடைகளுக்கு இனக்க சபையில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு நிலுவை வருமானம் அறவிடப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்வதுடன் ஏனைய நிலுவைகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| **2.2.5 கோழி இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடை குத்தகை** | | |
| 2017 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான கோழி இறைச்சி குத்தகை நிலுவை மற்றும் கருவாட்டுக் கடை குத்தகை நிலுவை முறையே ரூபா 1,516,683 ரூபா 244,010 தொகையை அறவிட சபை இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017, 2018 ஆம் ஆண்டு கோழிக்கடை குத்தகைதாரருக்கு வழக்கு நடைபெற்று வருவதுடன் ஏனைய கோழைி இறைச்சிக்கடை கருவாட்டுக்கடை குத்தகைதாரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| **2.2.6 வாராந்த சந்தை, மரக்கறி சந்தை மற்றும் சிற்றுண்டிசாலை குத்தகை** | | |
| 2009 ஆம் ஆண்டிற்கான வாராந்த சந்தை குத்தகை நிலுவை ரூபா 220,055, 2017 | குத்தகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாராந்த சந்தை, மரக்கறி சந்தை மற்றும் சிற்றுண்டிச்சாலை குத்தகை நிலுவை தொடர்பாக இணக்க |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டிற்குரிய மரக்கறி சந்தை நிலுவை ரூபா 16,300, 2018 மற்றும் 2019 ஆண்டிற்கான சிற்றுண்டிசாலை நிலுவை 101,875 தொகையை அறவிட சபை இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | சபையில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு தற்போது நீதிமன்ற நடடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

### 2.2.7 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரைக்குமான நீதிமன்ற தண்டப்பணத்தை முழுமையாக பெறுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2020 யூலை 02ஆம் திகதி வரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டுக்குரிய அறவீடுகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு ஆவணி மாத்தில் இருந்து 2020 ஜனவரி வரை ரூபா 5,580,899 சதம் கணிப்பிடப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு தயவாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**<br><br>சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசமான கரைச்சி வீதிக்கு அருகில் உள்ள ஆற்றுப்பகுதியில் பிரதேச மக்களால் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதனால் ஆற்றுப்பகுதி மாசடைந்து காணப்படுகின்றது. இது தொடர்பாக கடந்த வருட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் இன்று வரை சபையினால் எவ்வித நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கடந்த வருடம் சபையினால் அனுப்பப்பட்ட பதிலில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் மக்களால் கொட்டப்பட்ட கழிவுகள் இன்று வரை ஆற்று பகுதியை துப்பரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுச்சூழலை சரியாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆற்றுப்பகுதிகளில் குப்பை கொட்டுவது தொடர்பாக பொலிசாருடன் இணைந்து நகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆங்காங்கே குப்பை கொட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது. விளம்பரப் பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் நிதியளிப்பின் கீழ் 2008 ஆம் ஆண்டு நகரசபைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 26 தையல் இயந்திரங்களில் 22 தையல் இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் பயனற்றுக் காணப்படுகின்ற போதிலும் அவற்றைத் திருத்திப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 22 தையல் இயந்திரத்தில் திருத்தக் கூடிய தையல் இயந்திரங்கள் இனங்காணப்பட்டு திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கணக்காளர் பதவி கடந்த 08 வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டிருந்த போதிலும் அதனை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை உள்@ராட்சித் திணைக்களத்திடம் பல தடைவை கோரிக்கை விடுத்துள்ள போதும் இன்னும் நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கவில்லை. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டின் சபையின் எல்லைக்குள் காணப்படும் 07 வட்டாரங்களுக்கான ஆதன வரி மதிப்பீட்டு பெறுமதி, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் 1999 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையிலேயே ஆதனவரி அறவிடப்படுகின்றது. | 2012 ஆம் ஆண்டு அடிப்படையில் வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2012 ஆம் ஆண்டு ஆதன வரி 07 வட்டாரங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் அதில் சில வட்டாரங்களுக்குரிய வரி மதிப்பீட்டு படிவத்தினை கோரிய போதும் வரி மதிப்பீட்டு திணைக்களத்தினால் சமர்ப்பிக்காமையினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. எனினும், 2021 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த நடடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ரூபா 127,443 பெறுமதியான கொடுப்பனவுகள் விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவல்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் நடைபெறாது என்பதை உறுதிபடுத்துகின்றோம். |

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.6.1 உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 07 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனத்திற்குரிய உரிமை மாற்றம் தொடர்பாக Department of Motor Traffic எலிவிட்டிக்கல மாவத்தை, கொழும்பு என்ற இடத்திற்கு மாற்றம் செய்யக் கோரி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன் |

3.6.2 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையில் காணப்படும் மகேந்திரா கப, றக, உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் 05 தொடக்கம் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்து பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது. | திருத்துவதற்கான அல்லது பதிவளிக்கதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இச்சொத்துக்கள் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு முகாமைத்துவக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.<br><br>உள்ளகக் கணக்காய்வுக் குழுக் கூட்டம் 2019.09.05, 2020.03.10 மற்றும் 2020.06.16 ஆந் திகதிகளில் நடைபெற்றுள்ளது இனிவரும் காலங்களில் இக்கூட்டக் குறிப்பு மாதா மாதம் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன் |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்க இலக்கம் DMA/01-2019 இன் பிரிவு 5.3 இன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் எவ்வித கூட்டங்களும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் காலாண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |